## முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி

நாள்: 07.06.2022 அ.வ.எண்.48/2012 வா.சா.1 மயில்சாமி தேவர்

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி :**

எனது வீடு கிழக்கு பார்த்த வீடு. எனது வீட்டிற்கு முன்பாக தென்வடல் வீதி உள்ளது என்றால் சரிதான். மேற்படி வீதியின் அகலம் என்ன என்றால் எனக்கு தெரியாது. எனது வீட்டின் வடபுறம் எனது பெரியப்பா வெள்ளங்கிரி தேவரின் வீடு உள்ளது. அதுவும் கிழக்கு பார்த்த வீடு தான். அவருக்கு குழந்தைகள் இல்லை என்பதால் அவரது சகோதரியின் குழந்தையை வாரிசாக வளர்த்து வருகிறார். வெள்ளங்கிரி சகோதரியின் பெயர் பேச்சியம்மாள். எனது வீட்டிற்கு முன்புறம் ஒரு அடி அகலத்தில் திண்ணை உள்ளது. அந்த திண்ணையை ஒட்டி கிழபுறமாக தான் தென்வடல் வீதி உள்ளது என்றால் சரிதான். எனது பெரியப்பா வீடு வடபுறம் உள்ள நிலையில் தென்வடல் வீதி வழியாக அவரது வீட்டை கடந்து தான் பிரதான சாலைக்கு வரமுடியும் என்றால் சரிதான். எனது தென்புறமாக உள்ள காலியிடம் என்னால் விடப்பட்டுள்ளதால் அதனை புழங்கி வருவது சம்மந்தமாக தாவா வழக்கினை தாக்கல் செய்துள்ளேன். மேற்படி இடத்தை காலங்காலமாக அனுபவித்து வருவதின் காரணமாக தான் தாவா வழக்கினை தாக்கல் செய்துள்ளேன். எனது வீட்டின் தென்புறமாக உள்ள காலியிடத்தின் சர்வே எண் எனக்கு தெரியாது. மேற்படி இடமானது 4 அடி காலியிடமாகும். 4 அடியிலிருந்து 5 அடி வரை இருக்கும். மேற்படி 5 அடி இடம் சம்மந்தமாக எனது பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது. எனது வீட்டின் தென்புற சுவற்றை ஒட்டி தான் மேற்படி 5 அடி காலியிடம் எனது புழக்கத்திற்காக விடப்பட்டுள்ளது. எனது பிரமாண பத்திரிக்கையில் மேற்படி 5 அடி காலியிடத்தை எனது வீட்டின் முன்வாசலாக நானும், எனது தகப்பனாரும் பயன்படுத்தி வந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனது வீடு கிழக்கு வாசலாக உள்ள நிலையில் கிழபுறம் தான் முன்வாசல் வர வேண்டுமென்ற நிலையில் தென்புறத்தை எவ்வாறு முன்வாசலாக பயன்படுத்துகிறேன் என்றால்

கிழபுறத்தில் போதுமான அளவு இடம் இல்லாததால் தென்புற காலியிடத்தை முன்வாசலாக பயன்படுத்தி வருகிறேன். அவ்வாறு நான் தென்புற காலியிடத்தை முன்வாசலாக பயன்படுத்தவில்லை என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. மேற்படி தென்புற காலியிடத்தை பட்டாவின் அடிப்படையில் தான் உரிமை கோருகிறேன். மேற்படி 5 அடி தென்புற காலியிடத்தை பொறுத்து விளம்புகை பரிகாரம் கோரியுள்ளேனா என்றால் கோரியுள்ளேன். எனது உடன்பிறந்தவர்கள் வெளியூரில் இருப்பதால் தாவா இடத்தைப் பொறுத்து 2002 அல்லது 2003ம் வருடத்தில் விடுதலை பத்திரத்தை எழுதிக் கொடுத்துள்ளார்கள். எங்கள் பத்திரத்தில் உள்ளது படி தான் விடுதலை பத்திரத்தை எழுதிக் கொடுத்துள்ளார்கள். எங்கள் பத்திரத்தில் எத்தனை செண்ட் இடம் குறிப்பிடப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். நான் மூன்றாம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனது அப்பா பெயரில் எத்தனை செண்டிற்கு பத்திரம் உள்ளது என்றால் எனது அப்பா பெயரில் உள்ள சொத்தினை அப்படியே எனக்கு எனது சகோதர, சகோதரிகள் விடுதலை ஆவணம் எழுதிக் கொடுத்துள்ளார்கள். அதனை நான் அனுபவம் செய்து வருகிறேன். எத்தனை செண்ட் இடம் எங்களுக்கு பாத்தியப்பட்டுள்ளது என்பது தெரியாமல் தான் நான் வழக்காடி வருகிறேன் என்றால் ஆமாம். வா.சா.ஆ.1 எனது தகப்பனார் பெயரில் உள்ள கிரைய பத்திர சக்குபந்தியில் ரங்கசாமி தேவர் வீட்டு முன்வாசலுக்கு வடக்கு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது வீட்டிற்கு தென்புறமாக மேற்படி ரங்கசாமி தேவரின் வீடு உள்ளது. மேற்படி ரங்கசாமி தேவர் அந்த வீட்டில் எனக்கு தெரிய சுமார் 50 வருடங்களுக்கு மேலாக குடியிருந்து வருகிறார். வா.சா.ஆ.1 எனது தகப்பனாரின் கிரைய பத்திரத்தில் எங்களது சொத்திற்கு தென்புறமாக 5 அடி காலியிடம் இருப்பதாக எதுவும் குறிப்பிடாத நிலையில் சொத்து பற்றிய எந்த விபரமும் தெரியாமல் நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 விடுதலை ஆவணத்திலும் தென்புறமாக உள்ள 5 அடி காலியிடத்தைப் பற்றிய எந்த விபரங்களும்

காணப்படவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பட்டாவில் குறிப்பிட்டுள்ளவாறும் தாவா சொத்து அமையாத நிலையில் அதன் அடிப்படையிலும் மேற்படி 5 அடி காலியிடத்தைப் பொறுத்து எந்த உரிமையும் கோர இயலாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 பட்டாவில் குறிப்பிட்டுள்ள சொத்தின் சர்வே எண் என்ன என்றால் தெரியாது. வா.சா.ஆ.3 பட்டாவில் குறிப்பிட்டுள்ள சர்வே எண் சரிதான். தாவா சொத்தின் சர்வே எண்.521/24 ஆகும். நான் தாக்கல் செய்துள்ள வழக்கில் தென்புறமுள்ள 5 அடி காலியிடம் எனக்கு பாத்தியப்பட்டது என்று சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட இடத்தை ஆக்கிரமித்து நான் செப்டிக்டேங்க் கட்டியுள்ள காரணத்தால் தான் பிரதிவாதிகள் அதனை ஆட்சேபித்தார்கள் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 கிரையப்பத்திரத்தில் தென்வடல் தடத்தில் நடந்து கொள்ளும் பாத்தியம் மட்டுமே வழங்கப்பட்டுள்ள நிலையில் மேற்படி தென்புற இடத்தில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 வரைபடத்தில் புல எண்.521/24 என்பது எனது வீடு மற்றும் காலியிடம் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.3 பட்டா தென்புறமுள்ள காலியிடம் தொடர்பான பட்டா இல்லை என்றாலும், எனது வீட்டிற்கு மட்டும் வழங்கப்பட்டுள்ள பட்டா என்றாலும் சரியல்ல. தென்புற காலியிடத்தை பொறுத்து நான் எந்த ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் சொல்வது போல் எனது வீட்டிற்கு தென்புறமாக எனக்கு 5 அடி காலியிடம் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. எனக்கு உரிமை இல்லாத சொத்தில் செப்டிக்டேங்க் கட்டி உரிமை ஏற்படுத்த முயற்சி செய்ததை பிரதிவாதிகள் தடுத்ததின் காரணமாக தாவா வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி செப்டிக்டேங்க் கட்டப்பட்டுள்ள இடத்தில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்பதால் நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. அதனால் எனது வழக்கு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் மேற்படி காலியிடம்

அவர்களுக்கு பாத்தியப்பட்டது என்று எதிர்வாதம் செய்து வருகின்றனர். தாவா சொத்தை பார்வையிட நீதிமன்ற ஆணையர் நியமணம் கோரியுள்ளேனா என்றால் இல்லை.

ஒப்பம்/–(மயில்சாமி தேவர்)